**CC 77/2019**

**அ.சா. 1 பெயர் : காமாட்சி பாண்டியன் (மருத்துவர்)**

**11.02.2026**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய மனு அனுமதிக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

1. காயம்பட்ட நபரான வெள்ளைச்சாமிக்கு 21.10.2017 ம் தேதி கொடுக்கப்பட்ட X-Ray படிவம் மற்றும் X-Ray film -2 ஆகியவற்றை தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். ( **21.10.2017 ம் தேதியிட்ட வெள்ளைச்சாமி என்பவருடைய X-Ray Report form அசாஆ.6 ஆகவும் மற்றும் X-Ray films (எண்ணங்கள் - 2) அசாஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி நபருக்கு இடது உள்ளங்கை சுண்டுவிரல் பகுதிக்கு கீழே 5 வது எலும்பில் முறிவும், வலது கை மணிகட்டில் எலும்பு முறிவும் காணப்பட்டது. இது தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னிடம் சிகிச்சைக்கு வந்த அழகம்மாள் மற்றும் வெள்ளைச்சாமி ஆகியோர்கள் அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் தான் அவர்களை தாக்கியதாக கூறியுள்ளார்கள் என்றாலும், எந்த நபர் என்று பெயர் குறிப்பிட்டு கூறவில்லை என்றாலும் சரிதான். சிகிச்சைக்கு வந்தபிறகு காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்த விவரம் அசாஆ.4 மற்றும் 5 விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக தள்ளுமுள்ளு ஏற்பட்டு கீழே விழுந்திருந்தால் நான் முதல் விசாரணையில் கூறிய காயங்கள் இரண்டு நபர்களுக்கும் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. என்னுடைய போலீஸ் விசாரணையின்போது வெள்ளைச்சாமிக்கு X-Ray எடுத்ததாக நான் கூறும் விவரத்தை கூறினேனா என்றால் காயத்தன்மை குறித்து கருத்துரை வழங்கியுள்ளேன், குறிப்பிட்டு X-Ray எடுத்த விவரத்தை நான் கூறவில்லை.

**மறுவிசாரணை - இல்லை**